மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாராபுரம் தொகுதியில் கூட்டுறவுத் துறையின்கீழ் பனியன் தொழிற்சாலை துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

235—

ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கல்.

*2142—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அபிசேகக்கட்டளை ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளியை நடு நிலைப்பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1. கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்,

வினா எண் 302.—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) அத்திட்டங்கள் முழு அளவில் மக்களுக்கு பயன் பெற பெரியார் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா ?